ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

कर्मोदये कर्मफलानुरागाः तत्रानुतेयान्ति नतरन्ति मृत्युम् ।
सदर्थयोगानवगमात्समन्तात् प्रवर्तते भोगयोगेनदेही ॥

கர்மாவானது (பயனைக் கொடுப்பதற்கு) ஆரம்பிக்குங்காலத்தில் அக் கர்மப்பயனில் விருப்பங்கொண்டவர்களாகிய அக்ஞர்கள் அக் கர்ம பலத்தையே தொடருகிறார்கள். (ஆகையால்) மிருத்தியுவை அவர்கள் தாண்டுவதில்லை. தேஹியானவன் பரமாத்மாவுடன் (அபேத) ஸம்பந்தத்தையறிந்துகொள்ளாததால் விஷயங்களின் ஸம்பந்தத்தால் எல்லாவற்றிலும் பிருவர்த்திக்கிறான்.

இதற்கு முன்பு ஜீவர்களுக்கு அக்ஞானம்,காமம், இவ்விரண்டும் பந்தஹேது என்று ஸனத்ஸுஜாதர் திருதராஷ்டிரருக்குச் சொல்லிமுடித்தார். இப்போது இந்த சுலோகத்தால் கர்மாவும் பந்தஹேதுதான் என்று நிரூபணம் பண்ணுகிறார். “अमृत्युः कर्मणाकेचित्” சில கர்மாக்களாலே மிருத்தியுவைத் தாண்டி அமிருதத தன்மையையடைந்துவிடலாம் என்று கருதுகிறார்கள் என்பதாக முன்பு மதாந்தரம் ஒன்று ஸனத்ஸுஜாதரால் சொல்லப்பட்டுளது. அது ஸரியில்லை என்று அவரே இப்போது நிராகரிக்கிறார். அதெப்படியென்றால் கர்மாக்களை ஒருவன் செய்வானாகில் அதன் பயனை அவன் அனுபவிக்காமலிருக்க முடியாது, அதே ஜன்மத்திலோ, அல்லது அடுத்த ஜன்மங்களிலோ அக் கர்ம பலனை அனுபவித்தே தீரவேண்டும்: அக் கர்மாவைச் செய்யுங்காலத்தில் இந்த ஸ்தூல தேஹத்தின் அபேக்ஷை அவச்யமாயிருப்பதுபோல் அதன் பயனை அனுபவிக்குங்காலத்திலும் ஒரு ஸ்தூல தேகம் அவச்யம் வேண்டும், இதனால் ஜன்மாந்திரம், ஜரை, முதலிய விகாரங்களும் ஜீவர்களுக்கு ஸம்பவித்தே தீரும். ஆதலால் கர்மாக்களால் மிருத்தியுவைத் தாண்டிவிடலாம் என்று சொல்ல முடியவில்லை.

தவிற, அக்ஞானத்தால் உண்டாகிய கர்மாக்களுக்கு அக்ஞானத்தை அடியோடு அழிக்கச் சக்தி ஒருக்காலுமேற்படமுடியாது. கர்மாக்களை நிஷ்காமமாய் அனுஷ்டிப்பதனாலுண்டாகும் அந்தக்கரண சுத்தியோடு நிரந்தம்செய்யும் தியானத்தால் வீர்யம்பெற்ற ஆத்மா பரோக்ஷஞானமென்னும் அக்நியால்தான் அக்ஞானம் ஸமூலநாசம்பெறும். இதன்றி கர்மாக்களினாலும் மற்ற எவ்வித உபாயங்களாலும். அதனை நாசஞ்செய்ய சக்யமாகாது. ஸகாம கர்மானுஷ்டானத்தால் ஒருபோதும் ஸாத்தியமில்லை. அதனால் பிரும்ம ஞானமும் கிடைப்பதரிது. ஆதலால் கர்மாக்களால் கைவல்யம் அடைந்துவிடலாமென்பது தவறேயாகும். பிரும்மஞானமின்றி ஸாங்கியம், யோகம் கர்மம் பாண்டித்யம் முதலிய ஸாதனங்களால் மோக்ஷங் கிடைக்காது. போகந்தான் கிடைக்கும் என்று கருத்து.

V. J. S.

ஹிந்து ஸமயஸ்திதி.

நமது நாட்டில் வாழ்ந்துவரும் ஜனங்களெல்லோரும் தங்கள் தங்கள் மதக் கொள்கைகளை இன்னதென்று அறியாமலும், புறச் சமயத்தாரின் கொள்கைகளில் மோஹம்கொண்டு அம்மதத்திற் குள்ளாகி விடுகிறார்களென்பதை அறியாதாரும் உளரோ? தற்காலம் பெரியோர்களாகிய பெற்றோர்களுக்கே தமது மதாசார ஸம்பிரதாயம் இன்னதெனத்தெரியாதென்றால் சிறியோர்களாகிய ஆர்யமாணவர்களின் நிலைமையைப்பற்றி எடுத்துரைக்கவும் வேண்டுமா? முதல் வகுப்பாரென்று தன்னை மதித்துவரும் பிராமணர்களிடமே இவ்வித மாறான நிலை விளங்குமாயின் மற்ற வகுப்பாரின் தன்மையைப் பேசவும் வேண்டுமா? பிராமண வகுப்பினர் தனது குழந்தைகளுக்கு ஏழுவயதுக்குள் ஸம்ஸ்க்ருதபாஷையைக் கற்பித்துஉபநயன காலத்தில்உபதேசிக்கப்படும் ஸந்தியாவந்தனம் முதலிய காரியங்களின் மந்திரரஹஸ்யார்த்தங்களைக் கிருஹித்துக் கொண்டு நடக்கத்தக்க மார்க்கத்தை நிறைவேற்றி வைத்தாலல்லவா அழகாகும். இதன்றி பள்ளிக்கூடத்தில் பையனை வைக்கும் போதே A முதல் Z வரையிலுள்ள ஆங்கில பாஷை பீஜாக்ஷரங்களை உபதேசித்துவிட்டு சுயபாஷையை அச்ரத்தையாகவே அப்யசிக்கும்படி செய்வது அழகாகுமா?

இதனால் தான் இந்நாட்டு ஆர்யச்சிறுவர்களுக்கு தங்களுடைய மதமின்னதென்றும் அதன் பயனின்னதென்றும் இன்னாரால் வெளியிடப்பட்டதென்றும் அறிவு விவேகமில்லாமல் இஃதெல்லாம் வீண் வேலைத் தொந்திரவு என நினைக்கும்படி நேரிட்டது. தற்காலத்தில் அனேக ஆஸ்திகப்ரபுக்களின் குடும்பத்தில் ஜனித்த பிராமணக்குமாரர்கள் அனைவரும் தன் தாய் தந்தையர்களால் ஆதாவுடன் அநுஷ்டிக்கப்பட்ட சிராத்தம் விவாகம் முதலிய

காரியங்களில் சிலவற்றை வீண் கட்டுப்பாடென்று நினைத்துக் கொண்டு கொஞ்சமும் சிரத்தையின்றி ஒழித்துவிட்டும் சிலவற்றை "கடனைத்தொலைக்கவேண்டுமே" என்று ஆபாசமாக அனுஷ்டித்துக் கொண்டும் வருகிறார்கள். பலர் எல்லா வைதிக காரியங்களையும் செய்யாமலேயே விட்டுவிட்டார்கள். அனேகமாக எல்லாப் பிரபு குடும்பங்களும் மோக்ஷமில்லை நரகமில்லை தைவமில்லை மதமில்லை என்ற அபிப்பிராயங்கொண்ட நாஸ்திகமயங்களாகவே மாறிவிட்டன. அவ்வண்ணமே ஹிந்துச் சிறுவர்களும் ஹிந்து மதமும் இருக்குமாயின் இன்னமெத்தனை காலத்திற்கு இவ்வாறு நிற்கும் என்று எண்ணுவது ?

மேனாட்டார்கள் தங்களை மஹாஞானிகளென்றும் யுக்தி புத்திசாலிகளென்றும் நினைத்துக்கொண்டு நமது நாட்டுச் சிறுவர்களைப் பாழாக்கி விடுகிறார்கள். அந்தோ ! ஒன்றுமறியாத ஆரியச் சிறுவர்களும் எப்படியாவது அவர்களின் மாயவலையில் சிக்கிக் கொள்ளாமல் தப்புவதற்கு வழிதேடாமல் உடனே அவர்களின் அபிப்பிராயப்படி ஹிந்துமதத்தையே ஸஹிக்காமல் வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். அவரவர்கள் சொந்தமதம் அவரவர்களுக்கு விசேஷந்தானென்பதை என் மறந்துவிடவேண்டும். இவ்விதம் சொந்த மதத்தை இகழ்ந்து புறமதத்தைப் புகழ்ந்து பேசுவது அறியாமையாலும் அறிவாளிகளின் உபதேச சிரவணமில்லாமையாலும் தான் கவனிக்கத் தக்கது.

பகவானுடைய அருளால் உத்தம பிராம்மணப்பிரபு குடும்பத்தில் ஜனிக்கும் பாக்யம் பெற்ற ஆர்யச்சிறுவர்களுக்கு அல்லவா முதலில் மதாபிமானம் அதிகமாக வேண்டும். தமது முன்னோர்களால் நியாயமார்க்கத்தில் ஸம்பாதிக்கப்பட்ட பூஸ்திதிகளை நம்மிடம் அளித்து வைத்திருப்பதானது எதற்காகவென்று இவர்கள் கொஞ்சம் சிந்திக்கவேண்டாமா? கோர்ட்டுச் செலவுக்கா ? அல்லது பாட்டுக் கச்சேரிக்கா தாசிகளுக்கா பந்துக்களுக்கா தனக்கா அல்லது காமமஹோத்ஸவத்திற்கா ? பிரபுவென்ற கர்வத்திற்கா இவைகளையெல்லாம் நடத்திக்கொள்வதற்காக நமது ஆஸ்திகர்களில்லை என்பது முக்கியமாய் கவனிக்கவேண்டும். மதக்ரந்தபோதனம், தேவாலயம், குளம், மதப்ராஸங்கம் முதலிய பல உத்தம விஷயங்களைச் செய்வதற்காகவல்லவா அது ஏற்பட்டிருக்கிறது.

இவர்கள் மதவிஷயத்தில் பணம், புத்தி, ஒன்றையுமே செலவழிக்காமலிருப்பார்களேயானால் இன்னம் கொஞ்சகாலத்திற்குள் நாம் எல்லோரும் மஹம்மதியர்களாகவோ, மேனாட்டினாகவோ மாறிவிட வேண்டியது நிச்சயமாய் ஏற்பட்டுவிடும். ஹிந்துதேசமே நசிக்கும்படிச் செய்யவந்த பாபிகளாக ஆகிவிடுவோம் என்பதில் ஐயமில்லை.

ஆதலால் ஆஸ்திக பிரபு குமாரர்காள்? கொஞ்சம் கவனியுங்கள். இதுவரையில் நீங்கள் ஏதோ ஒருவிதமாக காலங்கழித்து வந்தபோதிலும் இனியாவது கண் திறந்து உங்கள் மதத்தையும் உங்கள் தேசத்தையும் உங்கள் ஜனங்களையும் உங்கள் கடவுளையும் காத்துக் கொள்வதற்கு முன் வாருங்கள். நமது தேசத்தை அயல் நாட்டு மதம் மூடிக்கொண்ட பிறகு நீங்கள் எங்கே ஒதுங்க முற்படுவது முடியும்.

1. ஆகவே பல மதப்பிரசங்கிகளை நியமித்து ஆங்காங்கு சென்று வீதிகளிலும் ஆலயங்களிலும் நின்றுகொண்டு உங்கள் மதவிஷயங்களை பிரசங்கிக்கச் செய்யுங்கள்.

2. மதவிஷயமான பாடசாலைகளை ஏற்படுத்தி ஏழைகளுக்கு அன்னம் முதலியவை அளித்து அவர்களை சமயக்ரந்தங்களைக் கற்பிக்கச் செய்யுங்கள். நமது குழந்தைகள் மதக்ரந்தங்களைப் படிக்கலாமாவென்று நினைத்து அவர்களைப் பள்ளிக்கு அனுப்பாமலிருக்காதீர்கள்.

3. மதவிஷயமான பத்திரிகைகளைவரவழைத்து சந்தாவைக் கொடுத்து வாங்கி வாசிக்கச் சக்தியற்ற ஏழைகளை வாசிக்கும்படி செய்யுங்கள்.

4. உங்கள் கிருஹத்தில் நடக்கும் உத்ஸவாதிகாலங்களில் உங்கள் கிருஹத்திலேயே வித்வான்களை மதப்ரஸங்கம் செய்யும்படி உத்திரவு கொடுங்கள்.

5. தர்மகாரியங்களைக் குறைவின்றி நடத்துவதற்கு முயற்சியுங்கள்.

6. மதக்கிரந்தங்களையச்சிட்டு சகாய விலைக்கு விற்று எல்லாரையும் படிக்கும்படிச் செய்யுங்கள்.

7. மதஸந்தேகங்களைக் குரு பீடங்களில் தெறிவித்துக்கொண்டு அவர்களுடைய உபதேசப்படித்தான் அனுஷ்டிப்பது என்ற திடநிச்சயம் செய்துகொள்ளுங்கள்.

8. தேசப் பொதுவிஷயங்களில் அதிக அக்கரை எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். இதுதான் நமது மதாபிவிருத்தி மார்க்கமாகும். தற்கால நிலைமையை முற்றிலும் மறந்துவிடுங்கள். இதன் மூலமாகத்தான் நாமும் நம் தேசமும் க்ஷேமம் பெறவேண்டும். இல்லையேல் அனர்த்தந்தான். ஆதலால் நீங்கள் பிறந்தவிடத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது என்பது எனது பிரார்த்தனை. பிரபுகுமாரர்களே! மேற்கண்ட விஷயங்களில் உங்களுக்கு ஸர்வேசுவரன் நற்புத்தி கற்பித்து க்ஷேமத்தை நாடும்படி செய்வாராக. சுபம்!

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

கடவுள்.

(**R.** நடராஜன் எழுதியது.)

(மதம், நாகரிகம், கலை, தர்மம், இவை சம்பந்தமாகப் பலகட்டுரைகள் தொடர்பாகவெளியிடப்படுமாதலின் "ஆர்ய தர்மம்" என்ற பெயருடன் பத்திரிகா நேயர்கள் பொது ஜனோபகாரமாகத் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொள்ளலாம்.)

அலைகடல் சூழ் பரந்த பாரினிலே பலவகைக் கருமங்கள் (செய்கைகள்) மனிதன், விலங்கு, பக்ஷி, நீர்வாழ் பிராணிகள் முதலிய ஜீவன்களால் நிகழ்த்தப்படுகின்றன. செய்யவோரன்றி செய்தல் செய்யப்படுதல்களாகிய சப்தங்களுக்கே அவகாசமில்லையன்றோ! மனிதன் கோட்டையைக் கட்டுகிறான். மிருகங்களும் பக்ஷிகளும் பார்க்கின்றன, அல்லது செல்கின்றன, எண்ணுகின்றன என்பனபோன்ற பதார்த்தம் செயல் எண்ணம், அல்லது தோற்றம் இவை ஒவ்வொன்றுக்கும் கர்த்தாக ஏதாவதொன்று

அங்கீகரிக்கப்படவேண்டியிருக்கிறது. உலகிலே தோற்றும் பல பதார்த்தங்களுக்கும், செய்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் ஜீவர்களைக் கர்த்தர்களாக சாதாரணமாக எண்ணுகிறோம். தனிப்பட்ட ஏதோ சில பதார்த்தங்களை ஒருவிதமாகத் தோற்றத்தை அடையும்படி செய்வதற்கும், சில செய்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் மாத்திரம் குறிப்பிட்ட ஜீவன் கர்த்தாவாக இருக்கலாமேயல்லாது, உலக முழுமையினுடைய உற்பத்திக்கும், எல்லா செய்கைகளுக்கும் தோற்றங்களுக்கும் அதிஷ்டானமாக அது இருக்கமுடியாது. ஓர் விதத்தில் அதிஷ்டானமாகக் கூறப்படும் ஜீவகோடிகளும் அதனதன் உற்பத்தி, அபிவிருத்தி, நாசம் இவைகளுக்குக் காரணமாக இருக்கலாமாயினும் ஆட்டுவிப்போன் அதிபதி விருஷ்டிப்போன் என்ற முறையில் பூரண பலம் பெற்றனவாக இருக்க இயலாதன.

இவ்வண்ணமே ஸூக்ஷ்மமாக உள்ள ஆகாயம், காற்று, மணல் நீர், மண் இவைகளுக்கு அதிஷ்டானமாக ஜீவராசிகள் இருப்பது ஸாத்யமில்லாமையின் எல்லைகடந்த சக்தி அற்றவைகளாயும், அதன் காரணமாக வறையறைக்குட்பட்ட உருவம், மணம், கனம் முதலானவையும், எல்லை கட்டப்பட்ட அதிஷ்டானத் தன்மையும் உள்ளவைகளாம் ஜீவன்கள். ஆகையால்தான் ஜீவர்களை கட்டுண்டவர்களாயும், பூர்ணத் தன்மை அற்றவர்களாயும் கூறுகிறோம். ஜீவர்களால் கண்டுபிடிக்கவொண்ணாத பல உலக நிகழ்ச்சிகளுக்கும் அகில ஜீவராசிகளுக்கும் பஞ்சபூதங்களுக்கும் அதிஷ்டானமான மேலான ஒன்றை ஒப்புகிறோம். அதுவே கடவுள். பூர்ணத்தன்மை வாய்ந்தது. ஸர்வவல்லமை படைத்தது. எவ்வுருவமும் தோற்றமும் எடுத்து எண்ண இயலாக் காரியங்களை சாதிக்கவல்ல ஸகல உலகங்களையும் ஆட்டுவிப்பதும் அதுவே. இதையே பலர் அவரவர் அறிவிற்கு எட்டியவாறாக இயற்கையென்னும் சக்தியென்றும் சூர்யன் என்றும் பலபல விதமாக இயம்புகின்றனர். ஆக்கல் காத்தல் அழித்தலாகிய உலகவ்யவஹாரங்களில் ஈடுபட்டக்கால் ஸகுணப்ரம்மம் எனக்கொள்ளுகிறோம். பூர்ணலய காலத்தில் நிர்குணப்ரம்மம் என்று சொல்வோம்.

ஒரு வஸ்துவுக்கு ஒரே பாஷையில் பல பெயர்கள் இருப்பது போலும் இதர பாஷைகளிலும் வேறுபட்ட உச்சாரணங்களைக்

கொண்ட ஒன்றற்கொன்று மாறுன பல பெயர்கள் வழங்கப் படுவதுபோலும். ஒரே கடவுளுக்கு ஒவ்வொரு மதத்தில் வெவ் வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதர்மத்தை அழித்து தர்மத்தை ஸ்தாபிக்கும் ஸமயங்களில் பெற்ற அனேக ரூபங்களையும் சக்திகளையும் ஆதாரமாகக்கொண்டு அனேக பெயர் கள் ஏற்படலாயின. கடவுளுக்கு (சிலரது அபிப்பிராயம்போல்) ஒரே பெயர் இருப்பது விவாதங்களுக்கு இடமில்லாமல் பூர்ணத் தன்மையை விளக்கச் சாதனமாக இருப்பினும் பல சமயங்களில் ஏற்பட்டத் திருவிளையாடல்கள் காரணமாயும் பக்தர்களுக்கு மோக்ஷம் கொடுக்கவும் துஷ்டர்களிடமிருந்து தனிப்பட்ட பக்தர்களு க்கேற்பட்ட துயரத்தை விலக்கவும் ஸமூஹம் அல்லது உலகங்க ளுக்கு தாங்கமுடியா கொடுமைகளை இழைத்துவந்தவர்களை ஒழிக் கவும் அவதரித்த பல சரித்திர வரலாறுகளைக் குறிப்பாக எடுத்துக் காட்டக் கடவுளின் பல பெயர்கள் சாதனங்களாக இருத்தலின் ஒரு கடவுளுக்குப் பலபெயர்கள் இருந்துவரும் சர்ச்சை விஷயத் தில் நாம் வெகுவாக காலத்தைக் கழிக்கவேண்டிய அவச்யமில்லை.

பூர்ண அறிவு சக்தி ஆற்றல் இவை பெறு ஜீவர்களின் எத்த கைய கடுமையான சட்ட திட்டங்களும் சீர்திருத்தங்களும் அபி விருத்தி முறைகளும் எதிர்பார்க்கும் பலனை ஒரு ஜீவனுக்காகிலும் பூர்ணமாகக்கொடுக்க முடியாததலின் அகில அண்டசராசரங்களை யும் கட்டுக்குட்படுத்தி இச்சையாயிருந்தால் நல்வழியில் ஈடுபட்டு பூர்ணசுகத்தைப் பெறுவதற்கு உபகாரமாக மாசற்ற மதம் என்ற சட்டம் கடவுளின் பெயரால் பிரகாசிக்கிறது.

இச்சட்டமுறைகளுக்கு முறணுக சட்டவிரோதமான காரி யங்களை அபரிமிதமாக ஆசரிப்பதாலும் அல்லது முற்றிலும் சட் டத்திற்குட்பட்டு நடப்பவர்களின் அமைதியைக் குறைத்தல் அல் லது கெடுத்தல்களாலும் ஈஸ்வரனுடைய அம்சங்கள் ஏற்பட்டு அதர்மங்கள் அகற்றப்படுகின்றன.

வாழ்க்கையில் இடுக்கண்களை விலக்க பராக்ரமம் அற்றவர்க ளாயும் மனதின் தோற்றத்தினை ஒட்டி அத்தோற்றமமே போல் வேகமாக தோற்றங்களையே நிரந்தரமானதாக தடையற்ற வழி யில் காரியங்களை சாதிக்க ஆண்மையில்லாதவர்களாயும் தங்களு டைய வாழ்க்கையின் சாதாரணமான போக்கையே சிறிதுதிருப்ப ஆற்றல் பெறுதவர்களாயும் பூர்ண அறிவு வாய்க்கப்பெறுதவர்க

ளாயும் உள்ள சிலர் கடவுள் இல்லையென்றே பல பெயர்கள் நாக ரீக மற்றதென்றே கூற முன்வரின் அவையாவும் பொருட்படுத்த யோக்யதைப் பெற்றவைகளன்று. மேலும் கடவுள் இல்லை என்னும் வாதமானது எந்நோக்கத்துடன் எதை ஆதாரமாகக்கொண்டு பரப்பப்படுகிறதென்பதைக் கவனித்தாலும் அறிவின் குறைவால் ஏற்படும் அனர்த்தங்கள் மிகவும் தெளிவாகப் புலப்படும்.

ஸ்ரீ பகவத்கீதையும், வர்ணாச்ரம தர்மமும்.

அஹிம்ஸையும், அவச்ய ஹிம்ஸையும்.

தர்மங்களுள் மிகவும் உத்தமமாகிய அஹிம்ஸா தர்மத்தைப் பற்றி வாயளவில்மட்டும் பேசிப்பல விபரீதக்கொள்கைகள் வெளி வருமிக்காலத்தில் ஹிம்ஸை அஹிம்ஸை ஆகிய இரண்டு விஷயத்திலும் கீதைபோதிக்கும்தத்வம் என்னவென்பதை இங்குசிறிது கவனிப்பது உசிதமாயிருக்கும். கீதையில் பலவிடங்களிலும் அஹிம்ஸா தர்மமானது மிகவும் தீவ்ரமாக அனுஷ்டிக்கத் தக்கதென்றும், அதைக் கைவிடுவதுபாபமென்றும் பலமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அஹிம்ஸா தர்மத்தைப்பற்றி நமது சுருதி ஸ்மிருதி கீதை முதலியவைகள் விதித்திருக்கும் கண்டிப்பானகட்டளைகளைப்போல் வேறு எந்தமதத்திலும்காணமுடியாது. சுருங்கச் சொன்னால் இந்த தர்மத்தை உலகத்திற்கு உபதேசித்த கௌரவம் நம் மதம் ஒன்றுக்கே உரித்தானதாயிருக்குமென்பதை ஒருவரும் ஆக்ஷேபிக்கமுடியாது.

இப்படி அஹிம்ஸையை வற்புறுத்திய கீதையானது அஹிம்ஸைக்கும் ஓர் வரையரையுண்டென்பதைக் காட்டி யுத்தாதிகளாகிய அவச்ய ஹிம்ஸையை அது அநுமதித்திருப்பதையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. கீதையானது மிகக் குரூரமான ஹிம்ஸையாகிற யுத்தத்தைச் செய்யும்படி அர்ஜுனனைத் தூண்டுகிறது. கீதையவதரித்த ஸந்தர்ப்பத்தை யோஜித்தால் இது நன்கு விளங்கும். அர்ஜுனன் ஆசாரியர்களையும் பந்துக்களையும் மற்றோரையும்

கொல்லுவது அதர்மமென்று பயந்து மனங்கலங்கி யுத்தம்செய்ய மறுக்கவே, பகவான் அவனது கலக்கத்தைத் தெளிய வைக்க விரும்பி யுத்தம் ஸ்வதர்மமென்றும் இங்கு கொல்லுவது பாபமாகாதென்றும் உபதேசித்து அவனை யுத்தம்செய்யும்படி தூண்டுவதற்குத் தானே கீதையைப் பிறப்பித்தார். இதிலிருந்து அஹிம்ஸா தர்மத்தைப்போல் அவச்ய ஹிம்ஸையும் தர்மமென்று காட்டுவதற்காகவே இது வெளியாகியதென்பது மறுக்கமுடியாதது. ஆகவே கீதையானது அஹிம்ஸையையும் ஹிம்ஸையையும்போதிப்பது முரண்பட்டதென்று நினைக்கலாகாது. நமது வைதிக மதத்தில் அஹிம்ஸாதர்மம் உயர்ந்ததென்ருலும், அஹிம்ஸா விதியானது யாகம், யுத்தம், ஆகிய இரண்டு விலக்குவிதியால் பாதிக்கப்பட்டுவிடுகிறதாக நமது மதம் ஒப்புக்கொண்டுவிட்டது. யாகம், யுத்தம் இரண்டிலும் ஹிம்ஸை கட்டாயமாக விதிக்கப்பட்டிருப்பதாலும், அது தர்மமென்று வேதாதி பிரமாணங்கள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டதாலும் அஹிம்ஸாவிதிக்கு விலக்கு விதியுண்டென்பதை நாம் அறியவேணும். கீதைக்குப் பாஷ்யம் செய்த மூன்று மதாசாரியர்களும் ஸ்ரீ தேசிகாதிகளும் யாக, யுத்த, ஹிம்ஸைகளை பரிசுத்தமான தர்மங்களென்று தங்களது கிரந்தங்களில் நிர்ணயித்துவிட்டார்கள்.

எது தர்மம் எது அதர்மம் என்பதை நிர்ணயம்செய்ய சாஸ்திரங்களே உரிமை பெற்றவை. அந்த சாஸ்திரங்கள்செய்யும் வியவஸ்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் பிராமாணிகர்களின் கடமையாயிருக்கிறது. ஓரிடத்தில் தர்மமாகச்சொல்லப்பட்ட ஒரு காரியமானது மற்றொருவிடத்தில் அதர்மமாக மாறிவிடுகிறது. அதர்மாகக் கருதப்பட்ட ஒருகாரியம் தர்மமாகவும் ஆகிவிடுகிறது. இதற்கு சாஸ்திரமே பிரமாணம். ஸத்யம் பேசுவது தர்மந்தான். ஆயினும் சிற்சில விஷயங்களில் அது அதர்மமாகிவிடுகிறது. ஸத்யம் பேசுவதால் ஒருவனுக்கு பிராணாபாயம் ஏற்படுவதாயிருந்தால் அப்போது அந்த ஸத்யம் அதர்மமாகிவிடுகிறது. இதுபோல் விவாஹாதி காரியங்களை ஸாதிக்கவேண்டிய ஸந்தர்ப்பத்தில் அவச்யமாயிருந்தால் அஸத்யம் பேசலாம். அது தர்மமாகவே சொல்லப்படுகிறது.

இதுபோல் அஹிம்ஸைதர்மமானாலும்நியாயஸ்தலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டவனைக் கொல்லாமல் விடுவது அதர்மமாகி

விடுகிறது. இன்னுமிதைப்போல் பல உதாஹரணங்களை ஊகித்துப்பார்க்கலாம். இம்மாதிரியான விடங்களிலெல்லாம் சாஸ்திரமே கதியாயிருக்கிறது. இந்த சாஸ்திரமானது ஹிம்ஸையை அதர்மமென்று சொல்லிவிட்டு யாக, யுத்த ஹிம்ஸைகளை மட்டும் தர்மங்களென்று சொல்லுவதால் இந்த இரண்டு விஷயங்களைத்தவிர மற்ற ஹிம்ஸைகளைச் செய்யக்கூடாதென்பது சாஸ்திராபிப்பிராயமாகவில்லையா? ஆகவே அஹிம்ஸையை எப்படி விடமுடியாதோ அதுபோல் அவச்ய ஹிம்ஸையையும் விடமுடியாதென்பது கீதையின் தாத்பர்யமாகிறது. ஆகையால்தான் பகவான் யுத்த ஹிம்ஸை ஸ்வதர்மமென்றும், அதைச் செய்யாமல் விட்டால் பாபம் நேருமென்றும் இரண்டாவது அத்யாயத்தில் பலமாக வற்புறுத்துகிறார்.

இது இப்படியிருக்கச் சில நாகரிகர்கள் அஹிம்ஸா வாதிகளென்று சொல்லிக்கொண்டு வைதிக மத தத்வத்தை அறியமுடியாமல் யாகாதி ஹிம்ஸைகளைக்கூட ஆக்ஷேபித்துவருகிறார்கள்.

இவர்கள் அஹிம்ஸாதர்மத்தை எவ்வித விலக்குவிதியில்லாமலும் எல்லாவிஷயத்திலும் ஆசரித்துவிடலாமென்று வாதிப்பது. சாஸ்திரங்களுக்கும், உலக அனுபவங்களுக்கும் அடியோடு விருத்தமானதே. ஹிம்ஸை, அஹிம்ஸை இவ்விரண்டு விஷயத்திலும் ஒரு முடிவு ஏற்படுவதற்கு எந்த மதத்தினரும் சாஸ்திரத்தையே நம்பவேண்டியதைத்தவிரவேறுவழியேகிடையாது. முதலில் யுத்த விஷயத்தைக் கவனிப்போம். யுத்தத்தில் எதிரியைக் கத்தி, துப்பாக்கி முதலிய குரூர ஆயுதங்களால் தாக்கிக்கொலைசெய்கிறார்கள். அடிபட்டவன் கோரமான ரத்தக்களரியுடன் கீழ்விழுந்து புரண்டு துடித்துத் தனது அருமையான பிராணனை இழக்கிறான். இதைக் கண்டு ஜயம்பெற்ற கக்ஷியார் சிறிதுகூட ஈவு இரக்கமில்லாமல் ஸந்தோஷ ஆர்பாட்டங்களும் ஜயகோஷங்களும் செய்து ஆனந்தப்படுகிறார்கள். கொலைசெய்தவனுக்குப் பலவித ஸம்மானங்களும் பிருதங்களும்கொடுத்து அவனை உயர்ந்த பதவிகளில் வைத்துக்கௌரவிக்கிறார்கள். அவனைப்பற்றிக் கவிகளும் காவ்யபுராணாதிகளில் வெகுவாகப்புகழ்ந்து வீரன் சூரனென்று ஸ்துதி செய்கிறார்கள். இறந்தவன் வீரஸ்வர்க்கம் போய்விட்டதாக நினைத்து யாவரும் திருப்தியடைகிறார்கள். யுத்த ஹிம்ஸையைப்பற்றி இவ்வாறு உலகந் தோன்றியநாள்முதல் இன்றுவரையில் எந்ததேசத்திலும் எந்த மதத்திலும் ஒரேமாதிரியான கொள்கை இருந்துவருவது பிரத்யக்ஷ

மான விஷயம். யுத்தஹிம்ஸையை அதர்மமென்று பழித்த மதம் ஒன்றுகூட உலகில் கிடையாதென்பது நிச்சயமே. ஹிம்ஸையை அடியோடு விலக்கிவிட்டதாகப் பெருமைகொள்ளும் பௌத்தாதிகள்கூட யுத்தஹிம்ஸையையதர்மமாகநினைப்பதாகத்தெரியவில்லை. இந்தியாவிலும் மற்றவிடங்களிலும் ராஜ்யம் நடத்திய பௌத்தாதி அரசர்கள் யுத்த ஹிம்ஸை அதர்மமென்று சொல்லி அதைக் கை விட்டதாக சரித்திரங்களால் தெரியவில்லை. நியாய ஸ்தலங்களில் மரணதண்டனைபெற்றவனைப் பௌத்தர்கள் ஜீவகாருண்யத்தை முன்னிட்டுக் கொலைசெய்யாமல் விட்டுவிடுவதாகவும்தெரியவில்லை.

நாகரிகம் முற்றிவிட்டதாகக் கருதப்படும் இவ்விருபதாவது நூற்றுண்டில்கூட இந்த யுத்தக் கொலையை ஆதரிக்காத தேசமும் மதமும் இருப்பதாகத் தெரியவில்லையே; நமக்கு நாகரீகத்தைக் கற்றுக்கொடுக்க வந்தவர்களென்று நம்மவர்களாலேயே ஸ்துதிக்கப்படுகிற மேற்றிசையார் இந்தயுத்த ஹிம்ஸையில் விசேஷ க்யாதி பெற்று விளங்கிவருவதை நாம் பார்த்துவரவில்லையா? யுத்தத்தில் எதிரிகளின் பிராணனைத் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் வாங்குவதற்குப் புதிது புதிதாக எவ்வளவு உபாயங்கள் தினந்தோறும் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆகாச விமானமூலமாயும் ஜலத்தின் கீழ் மறைந்தும் விஷப் புகைகளைக்கொண்டும் பிறரைக் கொலைசெய்வதற்கு எவ்வளவு ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. இந்த யுத்தக் கொலையைக் கற்றுக்கொடுப்பதற்காக எவ்வளவு பாடசாலைகள்? எவ்வளவு செலவு? இந்த கோரமான கொலைத் தொழிலைக்கற்கவிரும்பி நம்மவர்போடும் போட்டிதான் எவ்வளவு? நாகரிகம் முற்றியிருக்கும் இருபதாம் நூற்றுண்டில் கூட யுத்தக் கொலையானது வெகு ஸஹஜமாக இருந்துவருகையில் வைதிக ஹிம்ஸையைப்பற்றிமட்டும் அஹிம்ஸா வாதிகள் குறைகூறுவது ஏனோ? ஸாதாரணகாலத்தில் ஒருவன் ஒருவனைக் கொன்றுல் குற்றவாளியென்று கருதி அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு விடுகிறது. ஆனுல் யுத்தத்தில் கொன்றுல் அது புனிதமாகக் கருதப்படுவதுடன் கொன்றவனுக்கு கௌரவாதிகளும் செய்யப்படுகின்றன.

ஸாதாரணக் கொலைக்கும் யுத்தக்கொலைக்கும் என்னவாசி? இரண்டிற்கும் ஏதாவது வித்யாஸம் கண்ணுக்குப் புலப்படுகிறதா? ஒன்றுமில்லையே? இரண்டிலும் கொலைசெய்யப்படுபவன் அநியா

யமாகத் தனது பிராணனை இழப்பது ஸமமாககே இருக்கிறது. ஆகவே ஒன்றை அதர்மமென்று நினைத்துத் தண்டிப்பதும், மற்றொன்றைத்தர்மமென்றுசொல்லி கௌரவிப்பதற்கும் சாஸ்திரத்தை தவிற எந்த மதத்தினருக்கும் வேறு கதி கிடையாது. ஆகையால் தான் இக்காலத்திலும் வைதிக ஹிந்துக்கள், பௌத்தர், மஹம்மதியர், ஐரோப்பியர் முதலிய ஸகல ஜாதியினரும் யுத்தக்கொலையைத் தர்மமாகவும் இங்கு இறப்பவர்கள் வீரஸ்வர்க்கம் போவதாகவும் தீவ்ரமாக நம்புகிருர்கள். உண்மையில் இந்த விஷயத்தில் எந்த மதத்தினருக்கும் வேறு ஸமாதனமேகிடையாது. இவ்வாறு யுத்த ஹிம்ஸையைப் பற்றி உலகம் முழுவதும் நிச்சயமான நம்பிக்கை இருந்துவருவதால் அஹிம்ஸாவாதிகள் ஒதுங்கிநிற்பதற்கு ஒரு ஊசிமுனை இடங்கூட இப் பூவுலகில் கிடைக்காதென்பது நிச்சயம். யுத்த ஹிம்ஸையை அடியோடு நிறுத்திவிடலாமென்று நினைப்பதும் கனவுமாத்திரமே. பலிஷ்டனுல் துர்பலனுக்குத் துன்பம் நேரிடும்போதும் ஸத்யம் மறைந்து அஸத்யம் தலைதூக்கும் போதும் உலக மர்யாதையைக் காக்க யுத்தமொன்றுதான் சக்தி வாய்ந்த ஸாதனமாயிருக்கும். ஆகவே யுத்த ஹிம்ஸையானது இன்றியமையாததாகவிருக்கிறபடியால் எல்லா மதமும் இதைத் தர்மம் என்றே அங்கீகரிக்கநேரிட்டது. ஆகவே அஹிம்ஸா வாதிகளுடைய வாதம் இவ் விஷயத்தில் நிலைத்து நிற்கமுடியாததே.

இனி அஹிம்ஸாவாதிகள் எவ்வித வரையரையில்லாமலும் விலக்குவிதியில்லாமலும் எவ்விஷயத்திலும் ஒரே மாதிரியாக அகிம்ஸைக்கொள்கையை அனுஷ்டிக்கிருர்களா? அல்லது அனுஷ்டிக்க முடியுமா என்பதையும் உலகானுபவத்தைக் கொண்டுசிறிது ஆராய்வது ஆவச்யகமாகும்.

இப்போது உலகானுபவம் எப்படியிருக்கின்றதென்றால் மனிதன் ஒருவனே பூவுலகில் ஸகல ஸௌகரியங்களுடனும் வாழ உரிமைப் பெறவவனுகவும் மற்ற சராசர பிராணிகள் யாவற்றும் மனிதனுடைய ஸுகாதிகளை விருத்தி செய்ய ஏற்பட்டவைகளாகவுமே நினைக்கப்படுகிறது. பசு, பக்ஷி, மரம், செடி, கொடி எல்லா மனிதனுக்காகவே ஏற்பட்டனவென்று பாத்யம் கொண்டாடப்படுகிறது. ஆகவே மனிதனுடைய ஸுகத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய பிராணிகள் இருந்தால் அவைகளைக் கொன்று தீர்க்க வேணுமென்கிற கொள்கையானது நிராக்ஷேபமான வி

கும் பாவி நிற்கிறது. இதை மனிதனுடைய தலையிருக்கும் பேன் பூச்சி முதல் காடுகளிலிருக்கும் ஸிம்மம் முதலிய துஷ்ட ஜந்துக்கள் வரையிலும் உதாஹரணம் கொண்டு சிந்தித்துப் பார்க்கலாம். பேன் பூச்சியானது தலையில் மறைந்துகொண்டு ஹிம்ஸை செய்வதால் அதை எடுத்து நசுக்கிக் கொன்று போடுகிறோம். இது போல் தேள் பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களும் மனிதனுடைய இடையூறு விளைப்பதாலேயே கொன்றுவிடப்படுகின்றன, வீடுகளில் பண்டங்களைப் பாழாக்கும் எலி பெருச்சாளிகளைப்பற்றி கேழ்க்க வேண்டியதில்லை. காடுகளில் வஸிக்கும் புலி ஸிம்மம் முதலான துஷ்ட ஜந்துக்களும் எங்கு காணப்பட்டாலும் உடனே நிர்தாக்ஷிண்யமாகக் கொல்லப்படுகின்றன. துஷ்ட மிருகங்களை வேட்டையாடிக் கொல்வதும் மனிதர்கள் நிர்ப்பயமாக வாழவேண்டியேதான். அரசாங்கத்தாரும் மனித ஸமூகத்திற்குப் பங்கம் விளைவிக்கிற எலி நாய் விஷப்பூச்சி முதலியவைகளை அழிக்கப் பல வித காரியங்களைச் செய்து வருகிறார்கள். இந்த ஹிம்ஸைகளை எல்லாம் அஹிம்ஸாவாதிகள் அங்கீகரிக்கிறார்களா? இல்லையா? அங்கீகரிக்கிறார்களென்றால் இவர்களது அஹிம்ஸாவாதம் அழிந்துபோயிற்று. ஸர்ப்பம் புலிமுதலிய துஷ்டஜந்துக்களும்பிராணிகள் தானே? மனிதனுடைய நன்மைக்காக அவைகளைக் கொல்வது தர்மமாகுமா? ஈசுவரஸிருஷ்டியில் எல்லா பிராணிகளும் ஸமம் தானே. மனிதனுடை உயிருக்கும் மேற்படி துஷ்ட ஜந்துக்களின் உயிருக்கும் வித்யாசம் கல்பிப்பது இவர்களது ஸமதிருஷ்டிக் கொள்கைக்கு விருத்தமல்லவா? ஆகவே துஷ்ட ஜந்துக்களைக் கொல்வது நியாயமென்றிவர்கள் ஒப்புக்கொண்டால் அஹிம்ஸாவாதத்திற்கு விலக்கு விதியை இவர்கள் அங்கீகரித்ததாகிறது. அல்லது துஷ்ட ஜந்துக்களைக் கொல்வது கூட அதர்மமென்று இவர்கள் சொல்லுவார்களானால் மேற்படி ஜந்துக்களால் இதர பிராணிகள் அழிந்து போவதைத் தடுப்பது எப்படி? அஹிம்ஸாவாதி ஒருவரை ஸர்பமோ புலியோ, வேறு துஷ்டஜந்துவோ ஹிம்ஸிக்கவந்தால் அவர் தன்உயிரை லக்ஷ்யம்செய்யாமலும் அஜந்துவைக்கொல்லாமலும் இருந்துவிடுவாரென்பதை யார் நினைப்பது? ஆகவே துஷ்ட ஜந்துக்களைக் கொல்லாமல் விட்டு வைப்பதும் சாஸ்திரத்திற்கும் உலகானுபவத்திற்கும், ராஜதர்மத்துக்கும், விருத்தமானதே. ஆகலான் அஹிம்ஸைக் கொள்கையை வரை

யறையில்லாமல் அனுஷ்டித்துவிடலாமென்பது கனவுமாத்திரமே. இந்த நாகரிக காலத்தில் கூட மனித ஸமூஹத்தின் ஆஹாராதிகளுக்காகப் பிரதிவருஷமும் கோடிக்கணக்கானபிராணிகள் கருணையின்றிக் கொல்லப்பட்டு வருகின்றன. இதை உலகஸ்வபாவமென்று நினைத்து அஹிம்ஸாவாதிகள் தடுக்க முடியவில்லை. வைத்ய பரீக்ஷைக்கு வாசிப்பவர்களுக்காக பிராணிகளின்சரீர அமைப்பைக் காட்ட விரும்பி வைத்ய காலேஜிகளில் பல பிராணிகள் கொல்லப்படுகின்றன. இந்நாகரீகக் கொலையை அஹிம்ஸாவாதிகள் ஆக்ஷேபிக்கக் காணோம். அஹிம்ஸாவாதியென்று தன்னைப்பேசிக்கொள்ளும் நியாயாதிபதி ஒருவன் நியாயஸ்தலத்தில் நூற்றுக்கணக்கான மாணதண்டனைகளை விதித்து நேரில் இருந்தும் நிறைவேற்றுகிறான். இது அஹிம்ஸையா? அஹிம்ஸாவாதியான வக்கீலும் குற்றவாளியென்று ஸம்சயிக்கப்பட்டவனைக் கொலை செய்யவேண்டுமென்று வாதாடுகிறான். அஹிம்ஸாவாதிகளான டாக்டர்களும் வியாதிஸ்தனை ஊசியால் குத்தியும் சஸ்திரங்களால் கீறியும் வியாதிஸ்தனைக் கதறச செய்து துன்பம்விளைவிக்கிறார்கள். இவைகள் அஹிம்ஸைகளா! மேலும் மனிதவாழ்க்கையில் தெரிந்தும் தெரியாமலும் தவிர்க்க முடியாத பலஹிம்ஸைகள் நம்மால் அனுதினமும் ஆசரிக்கப்பட்டு வருவதை அஹிம்ஸாவாதிகள் மறைக்க முடியுமா?

கிருஷியை உயர்ந்ததென்று சொல்லுகிறார்கள். அதில் ஹிம்ஸையில்லையா? பூமியை உழும்போது அங்கு வாழும் பல பிராணிகள் அடிபட்டு இறந்துபோவது பிரத்யக்ஷமல்லவா? பயிரின் அபிவிருத்திக்காகவென்று பல பிராணிகளைக்கொன்று எருப்போடுவதில்லையா? மரம் செடி கொடி பழம் ஜலம் இவைகளில் ஜீவன் இல்லையா? இவைகளை நாம் அழிப்பது ஹிம்ஸையாகாதா? மனிதர்கள் நடக்கும்போதும் உட்காரும்போதும் படுக்கும்போதும் வண்டி முதலியவைகளில் சவாரி செய்யும்போதும் பூமியில் சஞ்சரிக்கிற பற்பல ஜீவராசிகளைத் தெரிந்தும் தெரியாமலும் கொல்லுவது நமது மனதிற்கு தெரியாதா? ஆகையால் அஹிம்ஸா தர்மத்தைநாம் எங்கும் ஆசரித்துவிடலாமென்று நினைப்பது அசட்டுத்தனமானதே. ஆகவே கீழ்காட்டிய பலவிடங்களில் அஹிம்ஸாவாதத்தை நாம் விலக்கிவிடவேண்டியிருக்கிறது.

இப்படியிருக்க நமது சாஸ்திரம் யுத்தத்திலும் யாகத்திலும் ஹிம்ஸை செய்யும்படி விலக்கு விதி செய்திருப்பதை மட்டும் நம் அஹிம்ஸாவாதிகள் ஆக்ஷேபிக்கக் காரணமே கிடையாது. இவர்களது அபாரகாருண்யத்தை விளம்பரம் செய்துகொள்வதற்கு இந்த சாஸ்திரீய ஹிம்ஸைகள் தானு அகப்பட்டன. கேவலம் மனிதனுடைய ஸுகத்திற்காவும் வேறு அல்பகாரணங்களுக்காகவும் பிரதிதினமும் பிரதிக்ஷணமும் நம் கண்கள் முன்பு நடக்கிற கோடிக்கணக்கான ஹிம்ஸையைத்தடுப்பதில் இவர்களது காருண்யம் சிறிதாவது உபயோகிக்கப்படக்கூடாதா? தன் வயிறு வளர்க்கவும் தன் சரீரம் புஷ்டியடைவதற்கும் வெகு உத்ஸாகத்துடன் பிராணிகளைக் கொன்று தின்னும் கூட்டத்தார் பிறருக்குஅஹிம்ஸோபதேசம் செய்யப்புறப்படும் வெட்கக்கேட்டை வர்ணிப்பது எப்படி? பெரும்பாலும் பிராணிகளைக் கொன்று உத்பத்தி செய்யப்பட்ட ஆங்கில மருந்துவகைகளால் ஆத்மபோஷணம் செய்கிறவர்கள் அஹிம்ஸோபதேசிகளாகி விடுகிறார்கள். மதத்தின் பெயராலும், சாஸ்திரத்தின் பெயராலும் ஹிம்ஸை செய்யக் கூடதாம். ஆனுல் தன் வயிற்றுக்காகச் செய்யலாமாம். என்ன ஜீவகாருண்ய பிரசாரம்! என்ன ஜாலக்கண்ணீர்!! சாஸ்திரஸம்ப்ரதாயமோ ஒரு வியவஸ்தையும் இவர்களுக்கு இல்லைபோலும்? ஹிம்ஸை விஷயமாக நமது வைதிகமதம் வகுத்த வழியை நாம் பரிசீலனம் செய்துபார்போம். இம்மதத்தில் யாக ஹிம்ஸை யுத்த ஹிம்ஸை ஆகிய இரண்டும் மிகமிகப்புனிதமானதென்றும் இவ்விரண்டும் அஹிம்ஸை என்றே சொல்லத் தக்கதென்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிராம்ஹணாதிகளுக்குக்கட்டாயமாக விதிக்கப்பட்ட யாகங்களில் பிராணிஹிம்ஸை செய்யும்படி ஸகல வேதங்களும் விதிப்பதுடன்அந்த ஹிம்ஸையானது அந்த பிராணிக்கு உயர்ந்த கதியைக் கொடுப்பதால் இதை ஹிம்ஸையென்று நினைக்கவோ சொல்லவோ கூடாதென்று பிரத்யக்ஷ வேதங்களில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த யாக நியாயத்தைக் கொண்டு யுத்த ஹிம்ஸையையும் தர்மமாக நிர்ணயிக்கப்பட்டது. சாஸ்திரங்களில் "ஒரு பிராணியையும் ஹிம்ஸிக்கக் கூடா"தென்று பொதுவாக ஒரு விதி இருந்தாலும் இது யாக யுத்தஹிம்ஸைகளைத்தவிர மற்ற ஹிம்ஸைகளையே தடுக்குமென்று விலக்குவிதியும் வேதாதிசாஸ்திரங்களிலேயே விதிக்கப்பட்டுள்ளது. இப்படி ஸித்தாந்தமிருப்பதால்தான் பகவான் கீதையில் யுத்த ஹிம்ஸையைத்தர்மமாக உபதேசித்தார்,

தவிர சரீரம் வேறு ஆத்மா வேறு என்கிற தத்வத்தை விளக்கி ஆத்மாவை எங்கும் எவ்விதத்திலும் கொல்லவோ அழிக்கவோ முடியாதென்றும் சரீரம் சட்டைபோல் அநித்யமாயும் அடிக்கடி மாற்றிக்கொள்ளக் கூடியதாயுமிருப்பதால் அதன் நாசத்தைப் பற்றிக் கவலை கொள்ளக் கூடாதென்றும் ஆரம்பத்தில் ஸமாதானம் சொல்லுகிறார். அர்ஜுனன், கொல்லுவது பாபமென்றும் ஆகவே தனக்கு வேறு சிரேயஸ்ஸைச் சொல்லவேணுமென்றும் கேட்டும் அதற்கு பகவான் யுத்தத்தில் கொல்லுவது தர்மமென்றும் அது மோக்ஷாதி ஸாதனமென்று ஆகவே அதைச் செய்யாமல்விட்டால் தான் பாபமென்றும் சொல்லி க்ஷத்ரியனுக்கு தர்மயுத்தத்தைத் தவிர வேறு சிரேயஸ்கரமான தர்மமே கிடையாதென்றும் இரண்டாவது அத்யாயத்தில் விவரிக்கிறார்; "நீ யுத்தத்தில் அடிபட்டு இறந்தால் ஸ்வர்க்கத்தை அடைவாய்; ஜயித்தால் ராஜ்யம் வரும்" என்று பகவான் யுத்தத்தில் இறந்தவனுக்கு நல்லுலகம் கிடைக்குமென்று ஸ்பஷ்டமாகச் சொல்வதைக் கவனித்தால் அஹிம்ஸாவாதிகளின் மயக்கம் தெளிந்து யுத்த ஹிம்ஸையை அவர்கள் அசுத்தமென்று பழிப்பதை விட்டு விட நேரும். இவர்கள் ஹிம்ஸை என்றால் என்ன? உலகத்தில் எதெது ஹிம்ஸையாகக் கருதப்பட வேணுமென்பது முதலான விஷயங்களை சாஸ்திரரீதியிலும், தர்க்க ரீதியிலும்தெரிந்து தெளிய விரும்பினால்"ஸ்வதர்மமபிசாவேக்ஷ்ய" (2–31) என்கிற சுலோகத்தையும், அங்கு ஸ்ரீராமானுஜர் ஸ்ரீதேசிகன் இருவரும் வெகு நன்றாக வெளியிட்டிருக்கும் ஸித்தாந்தத்தையும் கவனிக்கவேணும். இங்கு ஸ்ரீராமானுஜ பாஷ்யம் சொல்லுவதாவது="இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிற இந்த யுத்தமானது பிராணி மாரணத்தைச் செய்யக்கூடியதாயினும் அக்நீஷோமாதியாகத்தில் செய்யப்படும் ஹிம்ஸையைப்போல் ஸ்வதர்மமென்று நினைத்து நடுங்காமலிருப்பாயாக"—அக்நீஷோமீயாதியாகப் பிராணியின் ஹிம்ஸையானது ஹிம்ஸையேயாகாது. மிகக் கீழ்ப்பட்டதான ஆடு முதலிய தேஹம் போவதுடன் மிகவும் உயர்ந்ததான தேஹத்துடன் ஸ்வர்க்காதிலோகமும் அதற்குக் கிடைப்பதாக வேதம் சொல்லுகிறது. அதுபோல் இங்கு யுத்தத்தில் இறந்தவர்களுக்கும் நல்ல தேஹமும் நல்லுலகமும் கிடைப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறது.

அதுபோல் இங்கு யுத்தத்தில் இறந்தவர்களுக்கும் நல்ல தேஹமும் நல்லுலகமும் கிடைப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறது. ஆகையால் வியாதிஸ்தனுக்கு சஸ்திர சிகித்ஸை முதலியதுபோல் யாகத்தில்செய்யப்படும் ஹிம்ஸையானது அந்தப்பிராணியைரக்ஷிப்பதேயாகும்" என்று யாகஹிம்ஸையை உதாஹரணமாகக்காட்டி யுத்தஹிம்ஸை தர்மமென்று விஸ்தரிக்கப்பட்டது.

(தொடரும்)

(மனுஸ்மிருதி அத்தியாயம் 2)

சில வசனங்கள்.

1. ஸ்த்ரீஸ்வபாவம் புருஷர்களுடைய மனதைக் கலக்கக்கூடியது. ஆகையால் விவேகிகள் அவர்கள் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பார்கள்.

2. தெரியாதவனை மாத்திரமல்ல, பண்டிதனைக்கூட ஸ்திரீகள் வழி தப்பச்செய்து காம க்ரோதத்திற்குள்ளாக்கக்கூடியவர்கள்.

3. தனிப்பிரதேசத்தில் தெரிந்தவன், தாயாரோ, ஸஹோதரியோ, பெண்ணோ யாருடனும் உட்காரக்கூடாது. இந்திரியங்கள் விவேகியைக்கூட வழிதப்பச்செய்யும்.

4. சிறுவயதிலிருக்கும் சிஷ்யன் குருபத்னிகளுக்கு அவர்கள் சிறுவயதிருந்தாலும், விதிப்படி நான்தான் என்று சொல்லி நமஸ்கரிக்கவேண்டும்.

5. வெளிப்பிரதேசத்திலிருந்து திரும்பிவந்த சிஷ்யன் குருபத்நிகளின் காலைத்தொட்டுக்கொண்டு ஒவ்வொருநாளும் பூமியில் விழுந்து விதிப்படி நமஸ்கரிக்கவேண்டும். இப்படிச் செய்வது ஸத்புருஷர்களின் தர்மம் என்பது ஞாபகத்திலிருக்கவேண்டும்.

6. மண்வெட்டியால் பூமியை வெட்டுகிறவன் ஜலத்தை அடைவதுபோல் குருசொற்படி நடக்கும் சிஷ்யன் குருவினிடமிருக்கும் வித்யையை அடைவான்.

7. பிரம்மசாரி தலையை முண்டனம் செய்துகொள்ளலாம், பின்னிக்கொள்ளலாம், சடை வளர்த்துக்கொள்ளலாம். அவன்

காட்டைத்தவிர வேறு ஒரு இடத்திலும் ஸூர்யோதயத்திலும் அஸ்தமன ஸமயத்திலும் உறக்கம்செய்யலாகாது.

8. தெரிந்தோ தெரியாமலோ அவன் ஸூர்ய உதயகாலத்திலோ அஸ்தமன காலத்திலோ தூங்கினுல் அன்று முழுவதும் காயத்ரீ ஜபித்துக்கொண்டு உபவாஸமிருக்கவேண்டும்.

9. அவன் தூங்கும்பொழுது சூர்யன் உதயமோ அஸ்தமனமோ ஆகி மேற்சொல்லியப் பிராயச்சித்தம் செய்யாவிடில் மகா பாபியாக ஆவான்.

10. ஒவ்வொருநாளும் இரண்டு ஸந்தியாகாலங்களிலும் ஆசமனம் செய்து சுத்தமானவிடத்தில் உட்கார்ந்து மனதை ஒரு நிலையில் வைத்துக்கொண்டு விதிப்படி சிஷ்யன் ஜபம் செய்ய வேண்டும்.

R. ஸ்வாமிநாதய்யர்.

ஓர் கும்பாபிஷேகம்.

திருத்தருப்பூண்டி என்ற வில்வாரண்ய க்ஷேத்ரத்துக்கு வடமேற்கில் ஒருமைல் தூரத்திலுள்ள விட்டுக்கட்டியில் அகஸ்திய நதிக்குக் கீழ்கரையில் ஸ்ரீ விசாலாக்ஷிசமேத ஸ்ரீ காசிவிஸ்வநாதஸ்வாமி, விக்னேச்வரர், சுப்ரமண்யர், சண்டேச்வரர், நந்தி மூர்த்திகளைக்கொண்டதொரு ஆலயத்துக்கு ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ஆவணிமீ 27௳ ஞாயிற்றுக்கிழமையன்று நடந்தேறியது. ஷை ஆலயம் வெகு நாட்களாய்ப் பூஜையின்றியும் கிலமாகியும் கிடந்ததைத் திருத்தருப்பூண்டியில் அந்தண மரபிலுதித்தவரும் ஷை ஆலயத்துக்கு சமீபத்தில் நாகை தேவஸ்தான கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தாருமாகிய ஸ்ரீமான் டி. கே. கிருஷ்ணமூர்த்தி அய்யரென்பார் தன் கைப் பொருளாலும், இதரர்கள் திரவ்ய சகாயத்தினுலும் வெகு சிரமப்பட்டு ஷை திருப்பணி வேலையை மூன்றுமாதங்களுக்குள் நடத்தி மஹா கும்பாபிஷேகமும் நடத்திவைத்தார். ஷை அய்யர் கல்விஸ்தாபனமொன்று நடத்தியும், பொதுக்காரியங்களில் ஈடுபட்டும் உழைத்துவருகிறார். ஷை ஆலயத்துக்கு உபாயமான ஐவேஜிதா,

னிருக்கிறது. பூஜை நிவேத்தியத்துக்குப் பலருடைய உதவியை யும் எதிர்பார்க்கிறார். ஷை ஆலயத்திலிருக்கிற மகாலிங்கத்தின் பாணம் நர்மதாபாணமாகும். ஷை ஆலயத்திலிருக்கிற சுவாமிகள் வெகு லெக்ஷணத்தோடுமிருப்பதன்னியில் சண்டேஸ்வரர் மூர்த்தி சலவைக்கல்லில் வெகு அபூர்வ வேலைப்பாட்டுடன் செய்யப் பட்டதாயிருக்கிறது. சண்டேஸ்வரர் அவ்வளவு அழகான வேலைப்பாடாய் அமைந்துள்ளவிடம் வேறு எங்குமிருப்பது துர் லபம். பக்தர்கள் எண்ணம் கைகூடவிருக்கிற ஷை ஆலயத் திருப்பணி செய்தவர்களுக்கு நன்றிசெலுத்த கடமைப்பட்டுள் ளோம். தவிர நோயன்னியில் சரீர திடகாத்ரர்களாய் பூர்ண ஆயுளை அளிக்க பகவானை பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு:— ஷை ஆலயத்தில் கோயில்கொண்டுள்ள சண் டேஸ்வரர் மூர்த்தியை ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியது மிக அவசியமாகும்.

கிருஷ்ணஸ்வாமி. திருத்துறைப்பூண்டி.

கீர்வாணவாக் பரிபாலினீ ஸபா, கல்லிடைக்குரிச்சி.

இச்சபையின் ஆதரவில் நேற்று (14-9-32) மாலை 4 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது இவ்வூரிலுள்ள பல லௌகிகர்களும், வைதிகர்களும், பண்டிதர்களும், தீக்ஷிதர்களும், வந்திருந்தார்கள். ஏற்கனவே விளம்பரத்தில் குறிப்பிட்டபடி இவ்வூர் காலேஜ் ப்ரொபஸர் பிரும்மஸ்ரீ என். கோபாலய்யங்கார் அவர்கள் "விவாஹம்" என்ற விஷயத்தைக் குறித்து பலவிதமான கோட்பாடுகளுடன் ஒருமணிநேரம்வரை நீண்டதோர் சொற் பொழிவு நிகழ்த்தினார். அதில் முக்கியமாக ஸ்திரீகளுக்கு பால்ய விவாஹமே தகுந்தது என்ற அம்சத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள். பிறகு காவ்ய இதிஹாஸசிந்தகர் பிரும்மஸ்ரீ ராமலிங்கசாஸ்திரிகள் அவர்கள் மேற்படி விஷயத்தை அனுஸரித்து ஸம்ஸ்கிருத பாஷை யிலேயே ஓர் ப்ரஸங்கம் செய்தார். அதன் பிறகு வேதாந்த சிரோமணி பிரும்மஸ்ரீ ஹரிஹரஸுப்ரமணிய சாஸ்திரியவர்கள் சமீபத்தில் விவாஹஸம்பந்தமாக இந்தியா சட்டஸபையில் நிறை வேறியிருக்கும் "சாரதாசட்ட"மானது ஹிந்துமதத்திற்கும்,

அதிலும் பிராம்மணர்களுக்கு அளவற்றதனை கஷ்ட நஷ்டங்களை உண்டுபண்ணுவதால் ஷை சட்டத்தையே ரத்துசெய்யவோ, அல்லது பிராமணர்களைமட்டிலுமாவது மேற்படிசட்டத்திலிருந்து விலக்கவோ செய்யவேண்டுமென்று கனம் வைஸ்ராய் அவர்களை கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், சட்டஸபையில் மெம்பராக இருக்கும் ராஜாபகதூர் ஜி, கிருஷ்ணமாசாரியார் அவர்களை இதற்காகவேண்டிய முயற்சியையெடுத்துப் பாடும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தை ப்ரேரேபித்தார். இந்த ப்ரேரணையை டாக்டர் மகா-ள-ஸ்ரீ கிருஷ்ண சர்மா அவர்கள் ஆமோதித்துப் பேசியபிறகு ஸபையோர்களால் அபிப்ராயபேத மில்லாமல் ஏகமனதாக நிறைவேற்றியபிறகு இத்தீர்மானத்தின் ஸாராம்சத்தை கனம் வைஸ்ராய் அவர்களுக்கும், வைஸ்ராயின் ப்ரைவேட் ஸெகரெட்டரி அவர்களுக்கும், ராஜாபகதூர் ஜி கிருஷ்ணமாசார்யார் அவர்களுக்கும், தந்திமூலம் தெரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கலாச்சுது. பிறகு அக்கிராஸனாதிபதி, ப்ரஸங்கி அவர்களுக்கும், ஸபையோர்களுக்கும் ஸெக்ரெட்டரி வந்தனோபசாரமளித்து ஸபை இனிது கலைந்தது.

எஸ். கைலாஸநாத சாஸ்திரிகள்.

ஸாமகான நிர்ணய ஸபை.

நாளது ஆங்கீரஸ-ளு ஆவணி-மீ 27உ ஞாயிற்றுக்கிழமை (11—9—32) மாலை சுமார் (3) மூன்றுமணிக்கு இவ்வூர் நகரச் சிவன்கோவில் மந்திரோபதேசக் கொட்டகையில் ஸாமவேத நிர்ணயஸபை ஒன்று கூடியது. அதில் பல வித்வான்கள் கூடி இருந்தனர். அதில் பழையபாடமென்றும் புதுப்பாடமென்றும் இரண்டுவகையான தர்க்கம் நடந்தது. விஷயம் ஒன்றும் முடிவாகவில்லை. இச்சபை மறுபடியும் கூடிய சீக்கிரம் பஞ்சநதக்ஷேத்திரத்தில் கூடுமென்று தெரிகிறது. வேத சாஸ்திரங்கள் நசித்து வருமின்னாளில் இச்சபை தோன்றியது விசேஷமல்லவா? இதே போல் எல்லா இடங்களிலும் பற்பல சபைகளைத் தோற்றுவித்து ஜனங்களுக்கு நல்விஷயத்தைப் போதிப்பார்களாக.

இச்சபை தோற்றுவித்த மஹான் நீடூழி வாழ்க.

ஏனையோர் கவனிக்கவும். சுபம்.

S. N. சிவராமகிருஷ்ண தீக்ஷிதர்.
தேவகோட்டை.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

அநிருத்தன்.

1. கிருஷ்ணபகவானுக்கு ருக்மிணீதேவியினிடம் ஓர் பிள்ளை பிறந்தான். அவன் பெயர் ப்ரத்யும்நன். அவனுக்கும் ஓர் புத்ரன் பிறந்தான். அவனே அநிருத்தன் எனப்படுவன். அவன் அழகிற் சிறந்தவன். குணத்தில் உயர்ந்தவன். உயர் குலத்தில் பிறந்தவனல்லவா? இவனை எல்லோரும் விரும்பினர்.

2. உஷை எனும் உத்தமகன்யகை இவனை மணக்க விரும்பினள். அவள் பாணாஸுரனது புதல்வி. பாணனோ ஆயிரங் கைகளுள்ளவன். பலிசக்ரவர்த்தியின் புதல்வன். பரமசிவனிடம் பக்திகொண்டவன். எண்ணிறந்தவரங்களைப் பெற்றவன். இவனைக் கண்டால் தேவர்களுக்கு நடுக்கம்.

3. தேவரில் சிறந்தவர் விஷ்ணுவல்லவா? அவரே கிருஷ்ணனாகத்தோன்றியவர். அவரது பேரனல்லவா அநிருத்தன். தன் பெண் அவனை மணக்க பாணன் ஸம்மதிப்பானா? இதை அறிந்த உஷை வேறு உபாயம் செய்தாள். சித்ரலேகை எனும் தோழியை அழைத்தாள்.

4. தான் கனவில்கண்ட கணவனைச் சித்ரத்தில் எழுதிக் காட்டும்படி வேண்டினள். அவள் சித்ரவேலையில் கெட்டிக்காரி. பல அரசர்களது படத்தை எழுதிக்காட்டினள். இதல்ல! இதல்ல! என்று உஷை உரைத்தாள். அநிருத்தனை எழுதியபோது ஆமாம் இவரே என் பதியென்றாள்.

5. அவரை ஒருவருமறியாமல் தன்னிடம் அழைத்துவரும்படி கூறினள். சித்ரலேகை எல்லா வித்யையுமறிந்தவள். ஆகாய மார்க்கமாக த்வாரகைக்குச்சென்றாள். கிருஷ்ணன் அரண்மனையில் புகுந்தாள். ஒருவருமறியாமல் கட்டிலுடன் அநிருத்தனைத் தூக்கிவந்தாள். உஷையினிடம் ஒப்பிவித்தாள்.

6. அவள் அரண்மனையில் அநிருத்தனுடன் ஏகாந்தமாக இருந்தாள். சிலமாதங்கள் கழிந்தன. உஷை கர்ப்பிணியானாள். கர்ப்பிணியின் உடல் பெருத்து வெளுத்திருக்குமல்லவா? இதைக்

கண்ட தாதிகள் பாணனிடம் கூறினர். அவன் ஆலஸ்மனையில் புகுந்தான். அநிருத்தனை அங்கே கண்டான்.

7. அவனுக்கு அடங்காத கோபமுண்டாயிற்று. உடனே அவனைச் சிறையிலடைத்தான். இங்கு இது இப்படியிருக்க த்வாரகையில் அநிருத்தனைக் காணவில்லை. ஊரெல்லாம்தேடினூர்கள் அநிருத்தன் அகப்படவில்லை. எல்லோரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

8. லோகோபகாரியான நாரதர் அங்கு சென்றூர். அவரை வணங்கி பூஜித்து அநிருத்தனைக்கண்டீரா? என்று எல்லோரும் கேட்டனர். அவர் பாணாஸுரனது சிறையிலிருப்பதாகக் கூறினூர். உடனே கிருஷ்ணன் சேனையுடன் சோணபுரம்சென்றூர்.

9. சங்கை ஊதி தான் வந்தசேதியை பாணனுக்குத் தெரிவித்தார். அவன் ஸேனையைச் சண்டைக்குத் தயார்செய்தான். பாணனுடைய பக்திக்கிணங்கி பரமசிவன் அவனது கோபுரவாசற்படியில் எப்போதுமிருந்தார். பக்தனை ரக்ஷிக்க பகவானுடன் கொஞ்சம் போர்புரிந்தார்.

10. பகவான் அவரைவிட்டு அஸுரனிடம்சென்றூர். அவனது ஆயிரங் கைகளையும் அறுத்தார். அவனுக்கு நற்புத்திஉண்டாகி விட்டது. அநிருத்தனை விடுவித்தான். உஷையை அவனுக்கு மணம்செய்வித்தான். பகவானது பாதத்தில் விழுந்தான். அவரும் அவனை ஆசீர்வதித்தார்.

பக்தியினூல் பரமாத்மாவை வச்யம் செய். ஆனூல் பாணனைப் போல் கர்வங்கொள்ளாதே.

வெ. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

ஆலயநிர்ணயம்:—18௳ சென்னை புரசவாக்கத்திலுள்ள ஆஸ்திக அப்ராமணர்கள் ஓர் ஸபை கூடி நகர பரிபாலன ஸபையாரை விநாயகாலயம் கட்டுவதற்கு ஓர் இடமளிக்கும்படி வேண்டினர். உள்ள கோவிலை இடிக்க வேண்டுமென்று சிலர் கூறும் இச்சமயத்

தில் புது ஆலயம் கட்டவும் சிலர் முயர்ச்சிக்கின்றனர். எல்லாம் ஈசன் செயலே. ஆனால் நற்காரியத்திற்கு நிமித்தமாக உள்ளவர் நற்கதி பெறுவாரென்பது நிச்சயம்.

விஜயயாத்திரை:— 17௳ ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய பூஜையை முடித்துக்கொண்டு திருத்தணி விஜயம் செய்தார்கள். ஆங்குள்ள மௌனஸ்வாமிகள் ஸ்ரீமதாசார்ய பக்தி கொண்டு ஸ்ரீமஹாஸன்னிதானத்தை அழைத்து ஆதரித்தார். கருணாமூர்த்தியான பகவத்பாதாள் சண்டாளர்களுக்கு தர்சனமளித்து ஆசீர்வதித்தார்கள். ஸ்ரீ நவராத்திக்கு சென்னை மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜில் விஜயம் செய்வார்கள். புக்கைமறுபடியும் ஸ்ரீ குருவை வரவேற்றது.

ஆர்யபாடசாலை வாழ்க:— 18௳ தஞ்சை ஆர்யமதபாடசாலையின் ஆண்டுவிழா நடந்தது. 150-குழந்தைகள் படிக்கின்றன. குழந்தைகளுக்கு பரிசளிக்கப்பட்டது. பலர் உபன்யஸித்தனர். சாராதாசட்டம் கண்டிக்கப்பட்டது. பல அரிய தீர்மானங்கள் நிறைவேறின. இதன் நிர்வாஹகரான ஸ்ரீமான் வக்கீல் லக்ஷ்மண சாஸ்திரிகள் நீண்ட ஆயுளையும் ஆரோக்யத்தையும் பெற்று ஷ வித்யாசாலையை ரக்ஷிப்பாராக.

ஸ்ரீவேத வேதாந்த வர்த்தனீ:—1 ௳ இச் சபையின் 64-வது ஆண்டுவிழா சென்னையில் நடந்தது. பற்பல பண்டிதர்கள் மத விஷயமாக உபன்யஸித்தனர். பரீக்ஷையில் தேரிய ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸம்மானம் செய்யப்பட்து. ஸ்ரீ யதுகிரிராஜ ராமாநுஜஜீயர் ஸபையை அலங்கரித்தார். ஆங்கில நாகரிக மோஹமுள்ள நகரங்களிளெல்லாம் மாணவர்களை ஸநாதந தர்மத்தை அவலம்பிக்கும்படி செய்ய இது போன்ற ஸபைகள் இன்னும் தக்க முயற்சி செய்தல்வேண்டும்.

மாயையில் சிக்காதவர். 24௳ சென்னை கந்தஸ்வாமி கோவில் தர்மகர்த்தா பத்ரிகைகளில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் தங்கள் ஆலயத்தில் சண்டாளர் நுழையவில்லையென்றும் பத்ரிகைகளில் வெளிவந்த செய்தி பொய்யென்றும் ஏதாவது அப்படி ஸந்தேஹமிருக்குமோ என்று உடனே ஸம்ப்ரோக்ஷணம் முதலிய பரிஹாரங்களைச் செய்ததாகவும் அதில் கூறுகின்றார்,

தர்மம்போல் தோன்றும இந்த மாயைவலையில் சிக்காதவர்களைக் கொண்டாடாமலிருக்கமுடியவில்லை. இவ்வாலயம் முற்றிலும் வைச்யர்களுக்கே அதீநமானது. மற்ற ஆலயாதிகாரிகள் இதைக் கவனிப்பாரா.

மதப்பற்றுளோர். 25உ சென்னை மஹம்மதியர்கள் ஓர் பெருங்கூட்டம் கூடினர். ஓர் மஹம்மதிய பெண்ணை கிருஸ்தவர் தம் மதத்திற்கு இழுத்துச்சென்றதைக் கண்டித்தனர். நமது பெண்மக்களைக் கிருஸ்தவப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோம். பல பெண்கள் நெற்றிக்கிடவும் மஞ்சள் பூசவும் வெட்கப்படுகின்றனர். அந்த மதத்தில் சேராமலே நமது ஸதாசாரத்தைவிட்டு அன்யாசாரத்தைக் கைக்கொள்கின்றனர். இந்த நஷ்டத்தைக் கவனித்து ஸதாசாரத்தைப் பெண்களுக்குக் கற்பிப்பாரா?

ஸ்வதீந்த்ரரது நன்மொழி! 21உ ஷியார் பத்திரிகைகளுக்கு ஓர் செய்தி அனுப்பினர். அதில் நமது தேசத்திலுள்ள சிலர் தேவதா விக்ரஹம் சாஸ்த்ர நூல்கள் பண்டைய நாணயம் முதலியவைகளைச் சேகரித்து வைத்து இக்கஷ்டகாலத்தில் அவைகளை அமெரிக்காவிற்கனுப்பி பணந்தேட முயற்சிப்பதாகவும், ஒரு தேசத்திற்குப் பல்வகையிலும் நன்மை பயக்கும்படி ஷிவிஷயங்களைச் சொந்தலாபத்தைக் கருதி இங்ஙனம் விற்கக்கூடாதென்றும் பொது ஜனங்களும் அரசாங்கமும் இதை உடனே கவனிக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இதை முழுமனதுடன் நாம் ஆதரிப்பதைத் தவிர இதற்குமேல் என்ன கூறமுடியும்.

சிறந்த தர்மிஷ்டர். 19உ உடையார்பாளையம் ஜமீன்தார் பல்லாயிரம் ரூபாய் செலவுசெய்து ஓர் கட்டடம் கட்டி வைத்யசாலைக்களித்தார். தற்போதுள்ளவர் தந்தையால் வைத்யசாலை துவக்கப்பட்டது. தற்காலத்தவரால் அது நன்கு பரிபாலிக்கப் பட்டுவருவதுடன் விசாலமாய் விலையுயர்ந்த ஓர் கட்டடம் கட்டப் பட்டது. ஸதாசாரத்தைக் கைவிட்டதால் நம் நாட்டில் நாளைக்கு நாள், என்? நாழிக்கு நாழி புதிய புதிய விசித்ர நோய்கள் உண்டாகின்றன. இதை நீக்க ஜமீன்தார் செய்த தர்மம் மிகவும் கொண்டாடத்தக்கது.

வே. ஸோமதேவ சர்மா.